# பொதுக்காலம் 3 ம் வாரம் ஞாயிறு
# மூன்றாம் ஆண்டு 27–01–2013

## திருப்பலி முன்னுரை:

என் இனிய அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) மற்றும் சகோதரர்களே சகோதரிகளே நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் இயேசுவின் பெயரில் என் அன்பையும் வாழ்த்தையும் உரித்தாக்குகிறேன். ஆண்டின் பொதுக்காலம் 3 ஆம் வாரத்திலிருக்கும் நாம் இன்று சிறப்பாக இயேசுவின் பணியைத் தொடர்ந்தாற்ற அழைக்கப்படுகிறோம். இந்த சிறப்பு நிலையைப் பெற இன்றைய இறை வாக்குகளின் ஊடாக நம் சிந்தனைகளை செலுத்த விழைவோம்.

தமது வழக்கத்தின்படி ஓய்வுநாளில் இயேசு தொழுகைக் கூடத்திற்குச் சென்று வாசிக்க எழுந்தார். இந்த ஒரு வசனத்தை மட்டும் இன்று தியானிப்போம். லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே தருகின்ற இந்தத் தகவல் இயேசுவின் ஆளுமையை, இறைப்பற்றை, பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே இயேசுவிடம் நற்பண்புகளும், ஞானமும் நிறைந்திருக்கும் என்று நாம் நிச்சயம் நம்பலாம்.

அன்னை மரியா தம் அன்பு மகனை நல்ல பழக்கங்கள் நிறைந்த ஒரு மனிதனாகத்தான் நிச்சயம் வளர்த்திருப்பார். அத்தகைய பழக்கங்களுள் ஒன்றுதான் ஓய்வுநாள் தோறும் தொழுகைக்கூடத்திற்குச் சென்று இறைவேண்டல் செய்தல், இறைவாக்கு நூல்களை வாசித்தல். விளக்கமும் அளித்தல். ஓய்வு நாள் என்பது ஆண்டவரின் நாள். அவருக்கு உரியது. அவரைப் போற்றிப் புகழ, அவருக்குப் பணிவிடை புரிய ஒதுக்கப்படவேண்டிய நாள். அந்தத் தெளிவை எல்லா நல்ல யூதர்களும் கொண்டிருந்தனர். இயேசுவும் எத்தனை பணிகள் இருந்தாலும், எவ்வளவு களைப்பாக இருந்தாலும், ஓய்வுநாளில் தொழுகைக் கூடத்திற்குச் செல்வதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நாம் எத்தனையோ முறைகள் ஞாயிறு வழிபாட்டை களைப்பின் காரணமாக, வேறு பணிகளின் காரணமாகத் தவிர்த்திருக்கிறோம். ஞாயிறு என்பது ஆண்டவரின் நாள். அந்த நாளை அவருக்காக, அவரோடு செலவழிக்க வேண்டும். அதை ஒரு பழக்கமாக மாற்ற வேண்டும். இதில் இயேசுவே நமது மாதிரி! இயேசுவிடம் இருந்த இறைப்பற்று, நல்ல பழக்கம் என்னிலும் இருக்க வரம் கேட்டு தொடரும் இத்திருப்பலியில் இறைஞ்சி மன்றாடுவோம். இறையாசீர் பெற்றுக் கொள்வோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**ஞானத்தின் ஊற்றே எம் இறைவா!**

நீர் கொடையாகக் கொடுத்துள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள்: இன்றைய சவால்கள் நிறைந்த உலகின் நடுவே தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருக்கும் உமது அழைப்பை சரியான முறையில் அடையாளம் கண்டு, நீர் அவர்களிடம் ஒப்படைத்துள்ள இறைமக்களை நிறையுண்மையை நோக்கி வழிநடாத்திச் செயல்படவும், உமது திருவுளம் நிறைவேற்றுவதில் அவர்கள் மகிழ்ச்சியடையவும் அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஓய்வு நாளுக்கும் ஆண்டவரான இறைவா,**

இயேசுவிடம் இருந்த இறைப்பற்று, நல்ல பழக்கம் என்னிலும் இருக்க அருள்தாரும். ஓய்வு நாள் தோறும் உம்மைப் போற்றவும், உமக்காக வாழவும் உம் திருமகன் இயேசுவிடம் இருந்த அதே ஊக்கத்தின் மனநிலையை எங்களுக்குத் தர வரம் அருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!**

எமது குடும்பங்களுக்காக உம்மிடம் வருகின்றோம். இன்றைய நாட்களில் குடும்ப உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து குடும்பங்களில் அமைதியும் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூய ஆவியின் வல்லமையைக் கொண்டவரான இயேசுவே,**

உம்மைப் போற்றுகிறோம். பிணி போக்கும் வல்லமையை நீர் கொண்டிருந்ததுபோல, உமது சீடர்களாகிய நாங்களும் தூய ஆவியின் வல்லமை உடையவர்களாக வாழச் செய்தருளும். எங்களுக்கு உமது ஆவியின் கொடைகளையும், கனிகளையும், வரங்களையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வழிகாட்டும் இறைவா!**

ஒரே குடும்பமாக கூடியுள்ள எம் பங்கு மக்கள் அனைவருக்காகவும் வேண்டுகிறோம். தங்களின் அன்றாட வாழ்வில் உம்மை பிரதிபலிக்கவும் பிறர் நலனில் அவர்கள் அக்கறைக் கொண்டு வாழவரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**இந்த சினனஞ்சிறு குழந்தைகளுக்கு செய்தபோதெல்லாம் எனகே செய்தீர்கள் என்று மொழிந்த இறைவா,**

எம் பங்கில் உள்ள சிறுவர் சிறுமியர்கள் அனைவரும் படிப்பிலும், நல்லொலுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்றும், இளைஞர்கள், இளம்பெண்கள் அனைவரும் தங்கள் எதிர்கால வாழ்வை தன் கண்முன் கொண்டு எப்போதும் உமக்கு ஏற்ற பிள்ளைகளாக வாழ தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.